# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2014 பிறந்தவர்கள்

**பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.**

1. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)
எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

2. யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (குறள் 127)
எதைக் காக்கவிட்டாலும் தன் நாவைக் காக்க வேண்டும்; காக்கத் தவறினால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

3. கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (குறள் 393)
உண்மையான கண்ணுடையவர் என்று போற்றப்படுவர் கற்றவரே ஆவார்; கல்லாதவர் முகத்தில் உள்ள இரண்டு கண்களும் புண்களே அன்றி வேறல்ல.

4. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 423)
எந்தவொரு பொருள்குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

5. பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (குறள் 975)
பெருமைப் பண்பு உடையவர் செய்வதற்கு அருமையான செயலைச் செய்வதற்க்கு உரிய நெறியில் செய்து முடிக்க வல்லவர் ஆவர்.

2014 பிறந்தவர்கள்

6. கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. (குறள் 400)

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

7. அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. (குறள் 943)

உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்பது நீண்டநாள் வாழ்வதற்கு வழியாகும்.

8. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதுஇன்றி வந்த பொருள் (குறள் 754)

பொருள் ஈட்டும் வகை அறிந்து பிறருக்குத் தீமை செய்யாது வந்த பொருள் அறத்தையும் கொடுக்கும்,இன்பத்தையும் கொடுக்கும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.